செ.வெ.எண்: 340 நாள்: 27.06.2021

**கோவிட்டில் இருந்து காக்கும் கேடயமாக தடுப்பூசி செயல்பட்டு வருகிறது.**

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (27.06.2021) புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி அரிமளம் வட்டார கிளை சார்பில் வழங்கப்பட்ட கோவிட் அவசரகால மருத்துவ உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கோவிட் நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் கோவிட் தொற்று பெருமளவில் குறைந்துள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான பல்வேறு மருத்துவ உபகரணங்கள் தனியார் அமைப்புகள் சார்பிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் அரிமளம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி அரிமளம் வட்டார கிளை சார்பில் ரூ.1 லட்சம் மதிப்பில் கோவிட் அவசரகால மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பணியுடன் மக்கள்நல பணிகளும் மேற்கொள்கிறோம் என்ற அடிப்படையில் தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் இந்த மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். ஏற்கனவே தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள அனைத்து அறிவிப்புகளையும் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

தடுப்பூசி ஒன்றுதான் கொரோனாவில் இருந்து நம்மை காக்கும் கேடயமாக செயல்பட்டு வருகிறது. எனவே அனைவரும் தடுப்பூசியை கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கென மருத்துவத்துறையின் மூலம் தடுப்பூசி முகாம்கள் ஏற்படுத்தப்படுகிறது. கோவிட்டில் இருந்து பொதுமக்களை காப்பது அரசின் தலையாய கடமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில் பொதுசுகாதார துணை இயக்குநர் மரு.கலைவாணி, ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முன்னாள் ஒன்றிய குழுத் துணைத்தலைவர் பொன்ராமலிங்கம், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி அரிமளம் வட்டாரத் தலைவர் ரெங்கநாதன், செயலாளர் ஜுலிகிறிஸ்டி, பொருளாளர் ராஜி, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நிர்வாகிகள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**